# குளுக்கோமா வியாதிக்கு நீங்கள் ஆளாகலாமோ?

## நோயாளி சந்தர்ப்பம் ஒன்று

ஒரு கட்டிடப்பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த நீர்ப்பாசனத் தொழிலாளி தன்னுடன் வேலையில் ஈடுபட்டிருந்த நண்பர் தன் பக்கம் வீசியெறிந்த இரும்புச் சுத்தியலால் திடீர் அதிர்ச்சியும், பெருங்காயமும் அடைந்தார். காரணம்? சுத்தியலை வீசியெறிந்த நபர் தன் நண்பரை காணவில்லை. அவர் தன் கண் பரிசோதனை செய்த போதுதான் அவரின் கண்கள் பக்கப்பார்வையை குளுக்கோமா வியாதியால் இழந்துள்ளார் என்று தெரிய வந்தது.

## நோயாளி சந்தர்ப்பம் இரண்டு

ஒரு தம்பதிகள் புதிய கண்ணாடி எடுப்பதற்காக மனைவியின் கண் சோதனை செய்வதற்காக கண்வைத்தியரிடம் போனசமயம் மனைவியின் வற்புறுத்தலால் கணவனின் கண்ணும் சோதனை செய்யப்பட்டது. சோதனை மூலம் குளுக்கோமா வியாதியால் கணவனின் கண்பார்வை சிறிது சிறிதாக குறைந்து கொண்டு போகிறது என்று தெரியவந்தது.

உங்களுக்கு "குளுக்கோமா" என்ற கண்வருத்தத்தைப்பற்றி அதிகம் தெரியவில்லை என்று கவலைப்படவேண்டாம். உங்களை போன்று அநேகம் பேர் இருக்கிறார்கள். உலகில் கண்பார்வை குறைவதற்கு குளுக்கோமா வியாதி இரண்டாவது பெரிய காரணமாகும். அவுஸ்திரேலியாவில் நாற்பது வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு ஐம்பது ஆட்களுக்கு ஒருவராக இந்த வியாதி பாதிக்கிறது. நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்கள் 2 – 3 வருட இடைவெளிகளில் ஒழுங்காக குளுக்கோமாவுக்காக கண்ணை சோதனை செய்வது மிக்க பிரதானம். எனினும் குளுக்கோமா வியாதி வருவதற்கு சாதகமாக உள்ளவர்கள் 35வயதிற்கு மேற்பட்டதும் ஒழுங்கான கண்சோதனை செய்வது மிகமிக அவசியம்.

இந்த வியாதியின் பயங்கரம் எதுவென்றால் அந்த நீர்ப்பாசனத் தொழிலாளியின் நண்பர் போன்று கண் பழுதடைந்து, கொஞ்சம் பார்வை இழக்கும் வரை நோயாளிக்கோ அல்லது நோயின் அறிகுறிகளோ தெரியவராது. குளுக்கோமா வியாதியால் கண் பார்வை பாதிக்கப்பட்டால் திருத்தமுடியாத, திரும்பபெறமுடியாத பெரும் இழப்பு.

குளுக்கோமா வியாதியை குணப்படுத்தமுடியாது. தொடக்கத்தில் கண்டுபிடித்தால் கண்பார்வை இழப்பை கட்டுப்படுத்தி கண்பார்வையை குறைந்த அழிவோடு காப்பாற்றலாம். வியாதியை நேரத்தோடு பராமரித்தால் குளுக்கோமா நோயாளி கண்பார்வையை சீவியகாலம் வரை வைத்திருக்க முடியும்.

குளுக்கோமா கிருமிகளால் ஏற்படுவது இல்லை. ஆள் மாறி ஆள் தொற்றும் வியாதியும் இல்லை. இது ஒரு கண்வருத்தம். கண்ணில் உள்ள பிரதான நரம்பு பாதிக்கப்பட்டதால் ஏற்பட்டது. காரணம் என்னவென்றால் கண்ணில் உள்ள கண்அமுக்கம் கண்ணுக்குள் சேகரிக்கப்பட்ட திரவத்தால் அதிகரித்துள்ளது. இப்படி அதிகரித்த கண்அமுக்கம் பிரதான கண்நரம்பை பாதித்து சிறிது சிறிதாக பக்கப்பார்வையை பாதிக்கும். இது சிறிது சிறிதாக பக்கப்பார்வையை பாதிப்பதால் மிகவும் கூடிய பார்வையை இழக்கும்வரை நோயாளியால் உணரமுடியாது.

கண்பார்வைக்கு பக்கப்பார்வை முக்கியம். பக்கப்பார்வை உங்கள் நாளாந்த சீவியத்தில் படிகள் ஏறுவதற்கும் இறங்குவதற்கும், தெருவைக் கடப்பதற்கும் வாகனங்களை ஓட்டுவதற்கும் மற்றைய பக்கமாக செய்யவேண்டிய அலுவல்களுக்கும் சர்வ சாதாரணமாகப் பாவிக்கிறோம்.

வயது வந்தவர்களுக்கு வரும் சக்கரைவியாதி போல் (diabetes) குளுக்கோமா வியாதி அநேகமாக 40 வயதுக்கு மேற்பட்டவர்களை பாதிக்கிறது. ஆனால் இந்த நோய்க்கு வயது ஒரு எல்லை இல்லை. பிள்ளைகளையும் இளம் வாலிபர்களையும் இந்த நோய் பாதிக்கும். குடும்பத்தில் குளுக்கோமா உள்ளவர்கள், சக்கரை வியாதியால் வருத்தப்படுபவர்கள், ஒருதலைக்குத்து தலையிடியால் வருத்தப்படுபவர்கள், இரத்தவியாதி என்னும் பிளட் பிரஷரினால் கஷ்டப்படுபவர்கள் தூரப்பார்வை பார்க்க கஷ்டப்படுபவர்கள் கண்ணுக்கு நடந்த விபத்தால் "ஸ்ரெயிற்றோய்ட்" பாவித்த அல்லது பாவிக்கும் நோயாளிகள் "குளுக்கோமா" வியாதியால் பாதிக்கப்பட மிகவும் சாதகமாக உள்ளார்கள்.

“குளுக்கோமா” தான் வியாதி என்று கண்டுபிடித்தால் பராமரிப்பது வெகு சாதாரணம். பராமரித்தல் பின்வருமாறு.

<u>கண்மருந்து</u> – இது மிகவும் சாதாரணமான பராமரிப்பு. வேளை தவறாது குறித்த தவணைக்கு எடுத்தால் தான் கண் மருந்து வேலை செய்யும்.
சிலவேளைகளில் குளிசைகளும் வைத்தியர் பாவிக்க கொடுக்க முடியும்.

**<u>லேசர் பராமரிப்பு</u>** – கண்மருந்து தனியாக பாவித்தும், கண் பார்வை குறைந்து கொண்டு போகும் போது “லேசர்” முறை கையாளப்படும். லேசர் என்பது மிகவும் கடுமையான ஒளிக்கதிர். பலவித வைத்தியங்களுக்கு பாவிக்கிறார்கள். லேசர் ஒளிக்கதிர் கண்ணில் உள்ள திரவத்தில் ஏற்படும் கண்அமுக்கத்தை(கண்பிரஷர்) குறைப்பதில் உதவுகிறது.

**<u>சத்திர சிகிட்சை</u>** – கண்மருந்து அல்லது லேசர் ஒளிக்கதிர் பாவிக்கமுடியாத தருணத்தில் சத்திர சிகிட்சை செய்யப்படும்.

நீங்கள் 40வயதிற்கு மேற்பட்டவரோ அல்லது குளுக்கோமா வியாதியால் பாதிக்கப்படக்கூடிய சாதகமான கட்டத்தில் இருந்து இன்னும் கண்பார்வை சோதனை செய்யாவிட்டால் இப்போது சோதனை செய்ய நேரம் வந்துள்ளது. சோதனை வெகு சாதாரணம். அது சாதாரண கண்பார்வை சோதனை செய்பவர் செய்ய முடியும். இதன் மூலம் ஆகும் செலவு கொஞ்சம் (medicare) மெடிக்கெயா அல்லது தனியாக (Health Fund) கெல்த் பன்ட் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆங்கிலத்தில் வேறு கூடிய விவரங்கள் குளுக்கோமா வியாதியைப்பற்றி அறிய விரும்பினால் செலவு எதுவும் இன்றி தொலைபேசி 1800 500 880 மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

<u>தொடக்கத்தில் வியாதியைக் கண்டு பிடித்து பராமரிப்பது தான் குளுக்கோமா வியாதியால் கண் பார்வை இழப்பதை குறைக்க ஒரு வழி.</u>

**GLAUCOMA AUSTRALIA**
**P.O.BOX 420**
**CROWS NEST**
**NSW 1585**
**1800 500 880**

email: glaucoma @ glaucoma.org.au
www.glaucoma.org.au

குளுக்கோமா வியாதியால் துன்புறுவோருக்கு ஆறுதலும் அன்பும், தைரியமும் கொடுக்க குளுக்கோமா அவுஸ்திரேலியா ஒழுங்கான கூட்டங்களும், புதினப் பிரதிகளும் “குளுக்கோமா நியுஸ்” சிறு பேச்சு கூட்டங்கள் அடிக்கடி நடாத்துகிறது.

The translation of this pamphlet was made possible through the kind assistance of Dr Mariolyn Raj

Be eye wise
AVOID GLAUCOMA BLINDNESS
**GLAUCOMA AUSTRALIA INC**